

பொய்யாமொழி

ஆசிரியர்_ம. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, புரட்டாசி 4 (20—9—50) புதன்கிழமை. | மணி 4

"சிறை புகுந்த செம்மல்கள்....."

★

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கு "பொன்மொழிகள்" எழுதியமைக்காக 153-A. பிரிடின்படி ரூ 700 அபராதமும், கட்டத்தறினால் 6 மாத சிறைவாசமும், திராவிட முன்னேற்றக் கழக பொது காரியதரிசி C. N. அண்ணதுரை அவர்களுக்கு "ஆர்யமாயை" எழுதியமைக்காக ஷிபிரிவின்கீழ் ரூ. 700 அபராதமும் கட்டத்தவறினால் 6 மாத சிறைவாசமுமென திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் தீர்ப்புவழங்கினார் அபராதம்செலுத்த இருவரும் மறுக்கவே சிறைக்கு அழைத்து செல்லப்பட்டனர் 18—9—50உ பிற்பகல் 3 மணிக்கு.

— திராவிடர் தலைவரும், திராவிடர் தளபதியும் வெஞ் சிறை ஏகியதை நினைத்து உவகையடைகிறோம். ஏன்?

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கைப் பொறுத்த நிலம்" —என்று

வள்ளுவர் கூறுவது போல "புகழுடையாத உடலைச் சுமந்த நிலமாகிவிடும்" என்ற பெரும் பழியை திராவிட நாட்டுக்குச் சுமத்தாமலிருக்க இருவரும் முன்னம் பன் முறை சிறை சென்று திராவிடத்தின் மாண்பை உயர்த்தி யிருந்தாலும், மறுமுறையும் இங்குற்றஇளைஞரும் இதற்கு முன்பு கருத்தைச் செலுத்தாத மற்றோரும் இம்மாநிலம் மாசற்றதென மறுமுறையும் உணர — நிரூபிக்க அபராதம் எழுநூறும் செலுத்த எவ்வளவோ வாய்ப்பு இருந்தும் "கூறுங்கள் ஒருவார்த்தை...! கோடிக்கணக்கில் நிதி தருவோம்..." எனக் கூறும் இயக்கத் தொண்டர்கள் ஏராளமாக இருந்தும் — சிறைக்கு அஞ்சா சிங்கம் நிகர் உறுதியோடு, வீரமும்மகிழ்ச்சியும் முகத்திலே விளையாட, புன்சிரிப்பு அந்த இன்பத்தின் இதயஒலியாகமாற சிறை சென்று, சுதந்திரநாட்டில் எண்ண, எழுத, இதயத்திலே பூக்கும் கருத்துக்களை எடுத்துக் கூற உரிமையற்றுப் போனதை மாநிலத்திற்கு எடுத்துக் காட்டி, பழியைத் துடைக்க வந்த பகுத்தறிவுச் செம்மல்கள் வெஞ்சிறை ஏகிய நிகழ்ச்சி வீரத் தமிழர் பண்ணை நினைவூட்டுகிறது.

"புற்றில்வாழ் அரவுக் கஞ்சோம்!
பொய்யர்தம் மெய்க்கு மஞ்சோம்!
விற்றொழில் வேந்தர்க் கஞ்சோம்!
வெஞ்சிறை வாழ்வுக் கஞ்சோம்! ..."

வாழ்க உங்கள் புகழ்! வாழ்க இவ்வையகம்!!
மாண்பற்ற அறம் மடிக!!!

—ஆசிரியர்.

வார இதழ். ★ விலை அணா 1.

வாழ்த்துச் செய்திகள்.

டாக்டர். D. T. ராஜன்,
துணைத்தலைவர், தமிழ்நாடு ஷெடியூல்டுகாஸ்ட் பெடரேஷன்,
பொதுகாரியதரிசி, ஷெடியூல் காஸ்ட் பெடரேஷன் திருச்சி.
11—9—50

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

நும் பொய்யாமொழியின் தலையிதழை நன்னாளில் கிடைக்கப்பெற்றேன். வணக்கம்.

தங்களின் பொய்யாமொழி வாரத் தாளைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி. தங்களின் பல்லாண்டின் தொண்டு கிராம-பாமர மக்களுக்கு பெரிதும் பயன் பட்டு விழிப்புற்றிருக்கும் இதுசமயம், ஆண்டாண்டு களாக ஆட்சியாளர்களின் அதிகார வர்க்கத்தால் அடியுண்டு, அடிமை பூண்டு, அல்லலுற்று, அவனி யில் அல்லலுறும் நம் பிற்பட்ட மக்களுக்கு எழுச்சி ஊட்ட ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கு மென நம்புகின்றேன்,

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜாதி, மதம், உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரர் என்ற பேதத்தை ஒழித்து, கல்வி, அ[illegible]யல், பொருளாதாரம் இவை [illegible] எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் [illegible] எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற [illegible]மையை உலகிற்கு எடுத்துக்காட்டி, சாந்தியும், சமாதானமும் வாழ்க்கையில் நடாத்திக் காட்டிய காந்திமகானின் கொள்கைகளைப் பின்பற்றி நடக்க வும், ஜாதி என்பதை ஓர் சுத்த சூன்யமென அறி வூட்டிவரும் பெரியாரின் போக்கையும் இந்த நாட் டில் சகல துறைகளிலும் மற்றோர்களைவிட பிற்பட்ட வர்கள் அல்ல என போதித்து வரும் டாக்டர். B. R. அம்பேத்காரின் போதனைப்படியும் மக்கள் பின் பற்ற தங்களின் பொய்யாமொழி ஓர் சிறந்த வழி காட்டியாக இருக்கவேண்டுமென வாழ்த்தி இந்நாட் டில் ஒவ்வொருவரும் பொய்யாமொழியாக இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

ஃ ஃ ஃ

T. N. இராசாங்கம்,
தலைவர், இசைவேளாளர் சங்கம்,
வேளூர் ரேஞ்சு. (நாகை தாலுகா.)
11—9—50

ஐயா!

உங்களது வாரத் தமிழ் இதழ் பொய்யாமொழி காண மெய்யாகவே பூரித்தேன்.

முன்னேற்றத்தில் பலதோல்விகண்டு இதுவரை அசந்திருந்த மனித சமுதாயம் வெற்றிகண்டோம் வெற்றிகண்டோம் என விழிப்படையச் செய்யும் கருத்தோடு தங்களால் (வெற்றிகொண்டம்) ஜெயங் கொண்டத்திலிருந்து வெளியிடப் படும் பொய்யா மொழி இதழை பொய் வேஷதாரிகளாலும் சுயநல கும்பலாலும் கொய்யா திருக்க தாம்க[illegible] மாக காப்பாற்றும் கடமையை கைவிடமாட்[illegible] என மெய்யாகவே நம்புகிறேன். அதற்கு ஆவன செய்ய முழு நாட்டமுடையவனாக நடந்து கொள்ள கடமைப்பட்டவனாகிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வளர்க பொய்யாமொழி !
வாழ்க பாஸ்கரன் மெய் !

ஃ ஃ ஃ

K. P. தங்கவேல்
தி. க. தலைவர் ஆண்டிப்பட்டாகாடு.
6—9—50

உயர்திரு பேரன்புள்ள பொய்யாமொழி ஆசிரியர் அவர்களுக்கு

அன்புகலந்த வணக்கம் பல.

தாங்கள் இப்பத்திரிகை ஆரம்பித்து வெளியிட் டதை பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி எய்துகிறேன்.

காலவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இது ஒரு ஊன்றுகோல். இந்த உலகத் தில் பல துறைகளில்-பிற்போக்கு துறையில் நின்று கொண்டிருக்கும் மக்களை சீர்திருத்திக் கொண்டு வரும் தொண்டர்களுக்கு இது ஒரு ஆசிரியராகும்.

பன்வருஷங்களாக, தாங்கள் ஓர் சீர்திருத்த செம்மலாகத் தோன்றி, அறிவுப் பிரச்சாரம் செய்து, அதில் என்னைப்போல் கிராமிய மக்களை ஒரு சீர்திருத்த தொண்டனாக்கியது உங்கள் அறி வுரையே, ஆதலால் தாங்கள் ஆற்றலும், அறவுரை யும் உடைய பத்திரிகை ரொம்பவும் மக்களுக்கு அறிவு புகட்டும் என்பதே எனது முழு நம்பிக்கை.

இனி தங்களின் பூரா அனுபவமும், ஆற்றலும் தங்கள் பத்திரிகையில் ஒலிக்கட்டும். தங்கள் பத்திரிகை பொய்யாமொழி சகல துறைகளிலும் மெய்யாய் நின்று உழைத்து பெரியார் ஈ. வே. ரா. தொண்டு பயனடைவதுபோல் தங்கள் பத்திரிகை வளர்ச்சியடைய என் மனமார வாழ்த்துகிறேன்.

விந்தை....!

பெரியாரவர்களின் திருமணத்தை தவறாகக் கருதுபவர்களும் கூட (பெரியோர்கள் சிறந்த சொற்களை) சொல்லுவதை செய்தல் சிறந்ததே தவிர பெரியோர்கள் செய்வதைச் செய்யாதே என்பதே சிறந்த ஒன்றாகும். தமிழ்நாட்டில் கம்பர்தனைப் போற்றும் நமது மக்கள் பெரியார் அவர்களை திருமணத்தால் குறை கூறுவது ஏனோ! விந்தையிலும் விந்தை...!

—B. கருணாநிதி.

திருவள்ளுவர் காட்டும் தெய்வம்.

(புலவர். ப. அரங்கசாமி)

★

...ளுவரின் கடவுள் கொள்கையை ஒருவாறு ஆராயும் இவ்வேளையில், திருக்குறளில் அவர் வழங்கியுள்ள சில சொற்கள் குறித்து விளக்கம் பெறவேண்டியவர்களாக இருக்கின்றோம். கடவுளைக் குறிப்பதாக நாட்டில் இன்று வழங்கிவரும் சொற்கள் பலவற்றுள் 'தெய்வம்' என்ற சொல்லும் ஒன்றாக இருக்கின்றது. ஆனால் அச்சொல்லை வள்ளுவர் கடவுளைக் குறிக்கும் பொருளில்தான் வழங்கியுள்ளாரா என்பது ஆராய்ச்சிக்குரிய நிலையில் இருக்கிறது. நுணுகி ஆராய்ந்தால் அச்சொல் கடவுளைக் குறிக்கும் பொருளில் அவரால் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

முதலாவதாக, கடவுள் வாழ்த்துப் பாடுங்கால் கடவுளுக்குரிய பெயராக நாட்டில் வழங்கி வந்த பல்வேறு சொற்களையும் குறித்த வள்ளுவர் 'தெய்வம்' என்ற சொல்லை அவற்றுள் ஒன்றாகக் கூறாது விட்டிருக்கிறார். உண்மையில் அச்சொல் கடவுளுக்குரிய ஒரு பெயராக இருந்திருக்குமானால் அதனைக்கூறாதுவிட்டிருக்க மாட்டார். நிச்சயம் கூறி இருப்பார்.

எனவே தெய்வம் வேறு; கடவுள் வேறு என்பது புலனாகிறது.

இறைவனுக்குரிய இலக்கணம் கூறிச் செல்லும் வள்ளுவர் அவ்விறைவனது—கடவுளது பெருமையையும், தன்மையையும் கூறுங்கால் 'தனக்கு உவமை இல்லாத தனிப்பெருமையை உடையவனாவான்' என்று,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" —என்னும் குறள்

வாயிலாகக் குறித்துக் காட்டுகிறார்.

பின்னர், மக்களில் குறிப்புணரும் தன்மையுடையவர்களைப்பற்றிக்கூறுங்கால், "ஐயமில்லாது பிறருடைய உள்ளக்குறிப்பை உணரும் பண்புடையஒருவன் தெய்வத்துக்குச் சமம் ஆவான்"

"ஐயப் படாது அகத்து உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்" —எனக் கூறுகிறார். இங்கு தெய்வம் என்பதற்கு கடவுள் அல்லது இறைவன் எனப் பொருள் கொண்டால், முன்பு இறைவனுக்குக் கூறிய இலக்கணத்துக்கு மாறுபட்டதாக இருக்கிறது. அதாவது இறைவன் தனக்கு ஒப்புவமையே இல்லாதவன் என முன்பு கூறிவிட்டு, பின்னர் குறிப்பறியும் பண்புடையஒருவன் இறைவனுக்குச் சமமாவான் எனக்கூறினால் அது முன்னுக்குப் பின் முரணாகத்தானே காண்கிறது.

ஆகவே, தெய்வம் என்ற சொல் இறைவனைக் குறிக்கும் சொல்லாக இருக்க முடியாது. ஆயின் அச்சொல் குறிக்கும் பொருள் தான் என்ன?

'தெய்வம்' என்ற சொல்லை 6 இடங்களில் வள்ளுவர் வழங்கியுள்ளார்.

1. 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப்படும்
2. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
   ஐம்புலத்தார் ஓம்பல் தலை
3. தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
   பெய்யெனப் பெய்யும் மழை
4. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
   மெய்வருத்தக் கூலி தரும்
5. குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
   மடிதற்றுத் தான்முந் துறும்
6 ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
   தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

இக் குறள்களிலெல்லாம் தெய்வம் என்ற சொல் கடவுளைக் குறிக்கும் பொருளில் வழங்கப்படவில்லை எ[ன்]பது ஒவ்வொரு குறளையும் நுணுகி ஆராயின் நன்[கு] வெளிப்படும். இடம் வாய்க்கும்போது அவற்றைத் தனித் தனியே விளக்கிக்காட்டுவோம்.

'தெய்வம்' என்பது மக்கள[ில்...]ய உயர்ந்தவர்களைக் குறிப்பதாகும்.

மாக்கள் (விலங்கு), மக்கள், தெய்வம் என ... வாக மூன்றுநிலை உண்டு.

ஆறு அறிவு நிரம்பப்பெற்றவர்கள் மக்கள்.
ஆறு அறிவில் ஒரு அறிவு — பகுத்தறிவு — குறையின் அப்பொழுது மாக்கள்.

ஆறு அறிவோடு அதிகப்படியாக ஒரு அறிவு மிகும்போது தெய்வம். அவ்வதிகப்படி அறிவை 'தன்னுணர்வு' என்று சொல்லலாம் அதாவது அறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் சிறந்து 'மெய்யுணர்வு' பெற்ற நிலையாகும்.

இவ்வகை 'தன்னுணர்வு' அல்லது 'மெய்யுணர்வு பெற்றவர்களைத்தான் 'தெய்வம்' எனக் கூறப்படும். அவர்கள் கடவுள் அல்ல.

தாயுமானார், பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், இராமலிங்க அடிகள், இயேசு, நபிநாயகம் முதலானோர் தெய்வம் எனப்படுவர். இவர்கள் எல்லோரும் மக்களாகப்பிறந்து, மக்களாகவே வாழ்ந்திருந்தும், இன்[று] மக்களால் அவர்கள் பாராட்டப்பட்டு வணங்கப்படும் நிலையடைந்தது எதனால்? அவர்களிடம் உள்ள ஏதோ ஒரு தனி ஆற்றலினால்தானே! அவ்வாற்றல்தான் முன் கூறிய 'தன்னுணர்வு' அல்லது 'மெய்யுணர்வு' எனப்படுவதாகும். மக்களாகப் பிறந்து அவ்வுணர்வு — அறிவு பெற்றவர்கள் யாவருமே தெய்வமே.

—(தொடர்ச்சி 7ம் பக்க[ம்])

பொய்யாமொழி
ஆசிரியர் ம. பாஸ்கரனுர்
கதிர் 1 } 1981, புரட்டாசி 4 புதன் { மணி 4

வேண்டுதல் வேண்டாமை யில...
யாண்டும் இடும்பை யில.

...டிக்களில் விருப்பு, வெறுப்பற்றவர் எவரோ அவருடைய அடிச்சுவற்றை பின்பற்றுபவர்களுக்கு எப்போதும் பிறவிச்சுழலில் ஏற்படும் துன்பங்கள் ஏற்படாது.

மறைமலையடிகள் மறைந்தார்...!

★

"தனித்தமிழ் தந்த தந்தை ......!"
"திராவிட நாட்டுச் செம்மல் ......!"
"பொதுநிலைக் கழகப் புலவர் பெருமகனுர் ......!"

மறைமலையடிகளார்...! ஆம்.. ! சுவாமி வேதாச்சலம் அவர்கள். சென்னையைச்சேர்ந்த பல்லாவரத்தில்..........தனது இல்லத்தில் சென்ற 15-9-'50 வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு நம்மை விட்டு மறைந்தார் என்ற துயரச்செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்... !

கடந்த சில நாட்களாகவே, நோயுற்றிருந்த அடிகளார் தனது 75-ம் வயதில் இயற்கை எய்தினுர் இந்தமரணப்பே... ச்சு "காட்டுத்தீபோல்" ...ரு நொடியில் திக் ...கெட்டும் சிதறியது! ...னங்கருகின... ...மறத்தமிழர்...! நலங்தேடி முன் ...ேறுக்கிச் செல்லும்....! இந்த ...நிலைகையில்! நம் நாட்டவர்க்கு இதுவும் ஒரு சோதனை காலம் போலும்.. !

1876-ம் ஆண்டில் ஜூலை 15உ நாகையில் பிறந்த நந்தமிழடிகளார்.. ! சென்னையில் சிறந்து விளங்கி - செந்தமிழுக்குச் சேவை செய்ததை அறியாதார் யார் ?

தமிழ், ஆங்கிலம், வடமொழி ! ஆகிய இந்த மூன்று மொழிகளையும், "கசட றக்கற்று - கற்ற வழியிலே நின்று" கன்னித் தமிழை - தனித் தமிழாகக் காத்த ஒரே பெருமை நமது அடிகளாரைச் சார்ந்ததாகும்.

ஏறக்குறைய ஆறுயிரம் பெருநூல்களைக் கொண்ட தனது நூல்நிலையத்தின் உதவிகொண்டு நூற்றுக்கு மேற்பட்ட தனித்தமிழ் நூல்களை இயற்றி தமிழ் மக்களுக்கு அளித்திருக்கின்றுர்.

"பார்த்தாலும்-நினைத்தாலும்-படித்தாலும் படிக்கப் பக்க நின்று கேட்டாலும் பரிந்து உள் உணர்ந்தாலும் ! இத்தனைக்குந் தித்திக்கும் இனித்த சுவைக்கரும்பான" இவரது நூல்கள் மக்களுக்குப்பொதுமையையும்—புதுமையையும் புரட்சியையும் புகட்டுவனவாகும்.

"சைவசித்தாந்த சண்டமாருதம்" — திரு. சோமசுந்தர நாயகர் அவர்களிடம் வேதாந்த நூல்களைப் பயின்று வேதாந்தராய் விளங்கிய நம் அடிகளார் சிறந்த சீர்திருத்தக்காரராய் திகழ்ந்து மூடப்பழக்கவழக்கங்களை முறியடித்து.. ! ஏனைய சூழ்ச்சிகளை .... அகந்தையை அகற்றி !சாதி சமய சழக்குகளை சாடி வெற்றி முரசுகொட்டினுர்...!!!

"இருந்தமிழே உன்னுல் இருந்தேன்....! தேவர்
விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்"

என்ற ஒரே குறிக்கோளுடன் நின்று ஒன்றே குலமும் ஒருவனேதேவனும் என்பதைஉணர்ந்து உலகுடன் ஒன்றி— வாழ்வாங்குவாழ்ந்த மூதறிஞர், நம்மை விட்டுப்பிரிந்தார்....!

"சிந்தைக் கினிய செவிக்கு இனிய சிறந்த பேச்சு....! உளமுருக்கும்—உணர்ச்சியூட்டும் உயரியஎழுத்து "துறவு நிறைந்த தூய தமிழ் வாழ்வு" இவைகளையே உருவாகக்கொண்ட உத்தமர் நம்மை விட்டு மறைந்தார்...!

அந்தோ.. ! குணமெனுங் குன்றேறிநின்றக் கொள்கையாளரை! இன்று நாம் இழந்தோம் !! இனி என்செய்வோம்!!! இழந்த அவருடைய இடத்தில் இனி இருப்பவர் யார்? என்பதை எண்ணும்போது எண்ணத்தொலையாத இன்னல்கள் நமது நெஞ்சத்தைப் பிளக்கின்றன.

புகழொடு தோன்றிய அந்தப்புண்ணியனின் பூதவுடல் மறைந்து விட்டது. ஆனுல், என்றும் மறையாத அடிகளாரின்....! புகழுடம்பை...! பொன்மொழிகளை ! நாம் போற்றுதல் வேண்டும்...! அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆவன செயல் வேண்டும்...!

அருந்தமிழே! ஆர்ந்த தமிழினமே! ஆருயிர்த் தமிழ்நாடே ! அடிகளாரை நினைந்து பார் ! அவர்வழிநட...!என்று ஒவ்வொரு தமிழ்மகனும் உறுதிகொள்ள வேண்டும் எனக்கூறிக்கொண்டு அடிகளாரது பிரிவால் ஆற்ருெணுத் துக்கத்தில் வாடிவதங்கும் அவரது அன்பர்கட்கும் குறிப்பாக அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை மிகவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

பெரியார் ஈ.வே.ரா. ஈரோட்டு லிங்கன்.

B. கருணாநிதி.

73-வது பிறந்த தினம்.

சரோசினி சுந்தரராசன்,

17—9—50ல் முதல் பெரியார் ஈ வே. ரா. அவர்களின் 73வது பிறந்த தின விழா திராவிடநாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பலகாலமாய் பல மறைந்த பெரியார்கள், மகான்கள், சித்தர் முக்தர்கள் முதலானோர்களின் நாட்களை கொண்டாடி வந்தோம், வருகிறோம்.

ஆனால்...பெரியார்..! ஆம்...! திராவிடத்துத் தனிப் பெருந்தலைவர்...! பகுத்தறிவுப் பாசறை...! சிறந்த சிந்தனைச் சிற்பி...! வைக்கம் வீரர் ! தன் வாழ்நாளிலேயே பிறந்தநாள் கொண்டாடும் வாய்ப்பைப்பெற்றவர் என்பதை யார் மறுக்கமுடியும்?

வள்ளுவர், இராமலிங்க அடிகள் போன்றவர்கள் காட்டிய பாதையையும் ஏன்...! அதிகமாகக்கூட பெரியாரவர்கள் நாட்டு மக்களிடையேயும், விஞ்ஞானம், உலக சரித்திரம் முதலியவை நன்கு பயின்ற மாணவர் கூட்டத்திடையேயும், பாமர மக்களிடையேயும் வஞ்சனை கொண்ட வைதிகத்தின் உருவினை எடுத்துக்காட்டி— மோக்ஷம் என்பதை மோசம் என்று நிரூபித்து— நரகத்தின் வண்டவாளங்களை தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி-- தீண்டாமையை வைக்கம் சத்யாக்ரகம் முதல் இன்றுவரை கண்ட இடத்தில் சாடி— சொந்த நாட்டில் புராணங்களால்–மனுநீதியால் ஏன் சூத்திரன் ஆனோம் என்பதை ஆதாரத்துடன் காட்டி— சூத்திரன் என்பதை சூரணமாக்கி—மந்தியாம் இந்திதனை மழுங்கத்தட்டி—ஆங்கிலேயன் ஆட்சிக்கு முன் தனித்திருந்த திராவிடத்தை தட்டி எழுப்பி— தன்னிற் தாழ்ந்தவனும், தன்னைவிட உயர்ந்தோனும் நாட்டில் ஏனிருக்க வேண்டும் என்று முழங்கி வருபவர் பெரியார்!

வள்ளுவரும், தாயுமானாரும், ராமலிங்க அடிகளாரும் ஒருருவானவர் பெரியார்!

நாட்டிற்குழைக்கத் தன் தள்ளாத வயதிலும் தடி ஊன்றி இன்னும் பலகாலம் தொண்டு செய்ய பக்குவம் பெற்றவர் பெரியார்!

இப்பெரியாரின் 73வது ஆண்டு பிறந்த தின விழா 17–9–50ல் தொடங்குகிறது. அந்நாளை குலத்துக்கொருநீதி கூறும் மனுநீதியை அறமாகக் கொண்டவர் தவிர, ஏனையோர் கொண்டாட வேண்டியதவசியமாகும். இன்று கொண்டாட ஒப்பாதவர்களும்கூட எதிர்காலத்தில் கொண்டாடப் போகின்றார்கள் என்பது திண்ணம்...!

வாழ்க பெரியார்...! வாழ்க அவர்தம் புகழ்...!! ★

அமெரிக்காவிலே தோன்றிய ஆப்ரகாம் லிங்கன் தமது விடா முயற்சியாலும், சுயநலமற்ற தன்மையாலும், சலிப்பற்ற மனப்பான்மையாலும், தாம் நினைத்த ஓர் உன்னத லட்சியத்தைச் சாதிக்க முடிந்தது அவர் கொண்ட லட்சியம்—தாம் பிறந்த நாட்டிலே நடக்கும் கொடுமைக்கும் ஓர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பது. கொடுமைகள் யார் செய்தாலும் சரி, அது எங்கு நடந்தாலும் அழித்தே தீருவேன் என்று ஓயாது உழைத்து அதன் பொருட்டே தம் உயிரையும் தியாகம் செய்த ஓர் லட்சிய புருஷன். தான் கொண்ட லட்சியத்தையடைய எவ்வளவு இன்னல்கள் ஏற்படினும், ஊரார் தன்னைப் பற்றிக் கடின மொழிகள் கூறினாலும்; மக்கள் தன்னை வெறுத்துக் கல் கொண்டு தாக்கினாலும் தான் கொண்ட லட்சியத்தைச் சிறிதேனும் விட்டுக் கொடுக்காமல் அதன் பொருட்டுத் தன் உயிரையும் மதியாது உழைக்கும் த[illegible]வனைத்தான் லட்சிய புருஷன் என்று உலக மக்கள் [illegible]ர்கள்.

அதற்கேற்ப ஆங்கிலேய வியாபாரிகள் ஆப்பிரி[illegible] கண்டத்திலிருந்து நீக்ரோவர் என்னும் ஓர் இனம[illegible] (மனிதர்களை) விலைபேசி வாங்கி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே கொண்டுவந்து விற்றார்கள். இவர்களை வாங்கிய முதலாளிகள் இவ்வடிமைகளைக்கரும்பு தோட்டங்களிலும் பருத்திக் காடுகளிலும் வேலை வாங்கி நல்ல வருமானம் கிடைத்ததால்மற்றையஎல்லோரும் இந்த அடிமைகளையே வைத்து வேலை வாங்கத் தொடங்கினார்கள். இதன் காரணத்தினால் அடிமைகளை விற்கும் வியாபாரிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அனைத்திலும் இந்த அடிமைகளை நிரப்பிவிட்டார்கள். இதன் பலனால் பாடுபட ஒரு கூட்டமும், பாடுபடாது சுகவாழ்வு வாழ ஒரு கூட்டமும் என்ற நிலையாகிவிட்டது. இதனால் அங்கு அடிமைகளின் கூக்குரல் எங்கும் கேட்க ஆரம்பித்துவிட்டது. இவர்களை நேரம் காலம் இல்லாமல் வேலைவாங்கி இவர்களுக்குப் போதுமான உணவு கொடுக்கப்படுவதில்லை. இரவு நேரங்களில் படுத்து உறங்கக்கூட ஓர் நல்ல இடம் தரப்படுவதில்லை, கணவனைவிட்டு மனைவியை ஒரு காட்டிலும் மனைவியை விட்டு கணவனை ஒரு காட்டிலுமாக வேலை வாங்குவது. ஏதாவது ஒரு சிறுபிழை ஏற்பட்டுவிட்டால் மிருகங்களை அடிப்பதிலும் கேடாக அடிப்பது. எஜமானர் இஷ்டப்பட்டால் தன்னிடத்தில் வேலைபார்க்கும் அடிமையை உயிர் போகும் வரைக்கும் அடிப்பார். ஒரு சமயம் உயிர் போய் விட்டாலும் அந்த நாட்டுச் சட்டம் குறுக்கிடாது. இவ்வித அடாத அக்கிரமச் செயலுக்கு உட்படுத்தப்பட்டு நாயினும் கீழாய் நடத்திய வெள்ளை வர்க்கக் குண்டர்களின் அடாத செயலை ஒழி[illegible]லே

—(தொடர்ச்சி 7ம் பக்கம்.

அறிஞர்களின் : ஆராய்ச்சிக்கு ..!...?

பி எஸ். பி. மூர்த்தி

★

13-9-50ல்வெளியான பொய்யாமொழி வார இதழில் புலவர். திரு. ப. அரங்கசாமி அவர்கள், "முதற் குறளும் முழுமுதற் கடவுளும்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையில் ஆய்ந்து தேர்ந்த முடிவைப் பற்றியதில் ஆட்சேபம் இல்லை, அம்முடிவை நிலைநிறுத்த சான்றாக,

"புத்தர், இயேசுநாதர், முகமது நபி, குரு நானக், இராமகிருஷ்ணன், விவேகானந்தர், காந்தியடிகள்" முதலானோர் அறிவினாற்றான் மக்களால் மதிக்கப்பட்டார்கள் என்பதைமட்டும் எவரும் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் என நம்பமுடியுமா...? என்ற கேள்வி என் மனதில் எழுந்த பின்னரே இதை எழுதத் துணிந்தேன்.

மேற்கூறியவர்களை மகான்களாகத்தான் மக்கள் மதித்தார்கள் என்பது என் துணிபு. மகான்களின் இலட்சணம்:

> "தனி மனிதனி...திலுள்ள 'நான்' என்பது
> விடுதலைப் பெற்று எல்லோரிடத்திலும்
> 'தான்' ஆக பரிணமிக்கிறபோது 'மகான்'
> ஆகிறது. உலகத்திலுள்ள எல்லா ஜீவராசி
> களையும் யாரொருவர் 'தாம்' ஆக பார்க்
> கிறாரோ அவர்தான் மகான்'
>
> இது ஒரு அறிஞரின் உண்மையுரை.

இதன்படி பார்த்தால், மேற்கூறியவர்களை மகான்களாகக் கொண்டுதான் மக்கள் வணங்கினார்கள் என்பதுடன், அம்மகான்கள் காலத்தில் அறிஞர்கள், அறிவு அரசர்கள் வாழ்ந்தார்கள் என்பது புலவரவர்கள் அறியாததல்ல என்பதே என் எண்ணம்,

அறிவினாற்றான், மக்கள் அன்னார்களை வணங்கி வழிபட்டார்களா? கருணை, அன்பு, அருள், தன்னல மறுப்பு, ஞானம், யோகம், சத்தியம், அஹிம்சை இவைகளின்படி நடந்த மகான்கள் என்பதற்காக மக்கள் மதித்தார்களா?

இதை "அறிஞர்களின் ஆராய்ச்சி"க்கு விட்டு விடுகிறேன்.

"அறிவே தெய்வம்" என்ற புலவரவர்களின் முடிவு அறிஞர்களின் முடிவு.

இதையும் மிஞ்சியது "மகா கவி பாரதி" யாரின் முடிவு.

> "உயிர் களெல்லாம் தெய்வமன்றி பிறவொன்றில்லை
> ஊர்வனவும், பறப்பனவும் நேரே தெய்வம்..."

இவைமட்டுமா ?

> "பயிலும் உயிர் வகைமட்டு மன்றி யிங்கு
> பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம கண்டீர்
> கூடி நின்ற பொருள் அனைத்தின் கூட்டம் தெய்வம்,
> வெளியிலங்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்
> மேலுமிங்கு பல பலவாம் தோற்றம் கொண்டே
> இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்

தெய்வத்தைத்தேடி இவ்வளவு தூரம் போவானேன்? சுருங்கச்சொன்னால்,

"எழுதுகோல் தெய்வம்! இந்த எழுத்தும் தெய்வம்"

போதுமா...?

புறநானூற்றுப் :: புலவர்கள்.

இராம-குப்புசாமி

★

புறநானூற்றுப் புலவர்கள் எல்லாம் தொல்லிசைப் படைத்த நல்லிசைப் புலமையோராவர். இவர்கள் முச்சங்கங்களுமிருந்து தமிழ் ஆராய்ந்த காலவெல்லைக்குள் தமிழ்நாட்டில் ஆங்காங்கு தோன்றி வாழ்ந்தவர்கள். ஆழ்ந்த கருத்துக்களை இனிய தமிழ் நடையில் தெளிவாகப் பாடும் ஆற்றல்மிக்க இப் புலவர்களின் கவிகள், கற்குந்தோறும் அறிவைப் பெருக்கும் சுவைக்கேணிகள். இவைகள் சிறந்த பொருள்தரும் வனப்பெய்திக் கற்போர் மனதைக் கனிவிப்பதாகும்.

புலவர்கள், "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பரந்தநோக்குடையவர்களாய்ப் பல நாடுகளுக்கும் சென்று இயற்கைப் பொருள்களையும், உலகியற் பொருள்களையும் நுணித்தறிந்து அவற்றைத் தாம் பாடிய செய்யுள்களில் நன்கு விளங்க வைத்துள்ளார்கள்.

கவிபாடும் புலமைத் திறம் பெற்றவர்கள் தோன்றியிருந்தனர் அக்காலத்தில். கல்விச் செல்வமானது ஒரு பாலருக்கும், ஒருகுலத்தினருக்கும் என்று ஒதுக்கப்படாது இருந்ததின் காரணத்தினால, பெண்கள் கல்வி பூத்துப் பேரறிவுடையவர்களாய்த்திகழ்ந்தனர். பெண்புலவர்களை அரசாங்கங்களும் ஆதரித்து, பாராட்டி தங்கள் அரசவைகளில் அமர்த்துக் கொண்டனர். அரசர்களிடையே சந்து செய்விப்பதற்கும், தூது செல்வதற்கும், பெண் புலவர்கள் முன் வந்தனர், அதனால் பண்டைத் தமிழ்ப் பெண்கள் பெருமையடைந்தனர்.

இப்புலவர்கள், ஒருவரைப் புகழ்ந்து கவி பாடுவது மட்டுமல்லாமல், வசை பாடுவதிலும் சிறந்தவர்கள். பெருஞ்சித்திரனார் ஆரிடப்போலி பாடியதிற் சிறப்படைந்தவர். இதனை யாப்பெருங்கல விருத்தி உரையால் அறியலாம். சொல்லேருழவர்களைப் பகைத்துக்கொள்ளுதல் அறிவின்மையே என்பதை அக்காலத்து அரசர்கள் அறிந்திருந்தனர்.

—(தொடர்ச்சி அடுத்த பக்கம்.

... பெருமக்களிடையே நிகழ்ந்த சிறப்பான குணப்பண்பு அழுக்காறின்மை ஒருவரையொருவர் நன்கு தெரிந்து, பிறர்நலத்தைத் தயங்காது வெளியிட்டுக் கூறுவதற்கு அவர்கள் அஞ்சியதில்லை. பிறர் பெருமையைத் தெரிந்து கூறி தன்பெருமையைப் பெருக்கிக்கொண்டனர். கபிலர்- கழாஅத்தலையையும், இளங்கீரனார்- கபிலரையும் நம்பசலையார்- கபிலரையும், பெருஞ்சித்திரனார் மூட மோசியாரையும் சிறப்பித்துக்கூறி, தங்கள் பெருமையை பெருக்கிக் கொண்டனர். பண்டைப் புலவர்களிடையே அன்பும், நட்பும், வாய்மையும் இனிதமைந்து அழுக்காறு அறவே கடிந்தொதுக்கப்பட்டது, அதன் பயனால் தமிழ் மொழியும் தழைத்தோங்கியது.

தமிழரசர்கள் ஒருவரையொருவர் ஏறட்டுக்கொண்டனர். புலவர்களின் நன்மதிப்பையும், அன்பையும், உரையையும், பாட்டைப் பெறவேண்டி, புலவர்களுடன் அரசர்கள் உறவு கொண்டனர். அவர்கள் தங்களைப் புகழ்ந்து பாடும் வகையில் நடந்துகொண்டனர். வீரங்காட்டி அரிதிற் பெற்ற பொருளை ஈரம் காட்டி எளிதினளிக்கும் பேரரசர்களையே புலவர்கள் சிறப்பித்துப் பாடிவந்தனர். தம்மையும், தம் நாட்டையும் புலவர்கள் புகழ்ந்து பாடும் வகையில் நடந்தனர் தமிழரசர்கள். தமிழரசர், வீரமும் வண்மையுமே தம் பூணாகப் பூண்டு, புலவர் பாடலையே அதன்பயனாகத்துய்த்து தான்புகழெய்தினர் பாண்டியன் நெடுஞ்செழியன், " நான் என் பகைவரை முறியடித்துப் புகழ்சூடத் தவறுவனேல் ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதனைத் தலைமையாகக் கொண்டு உலகுள்ளளவும் மாயாப்புகழ் படைத்த புலவோர் என் நாட்டினைப்புகழ்ந்து பாடாது ஒழிவதாக " என்று வஞ்சினம் கூறினதால், பண்டைத் தமிழ்ப்புலவர்களின் புகழ் என்றென்றும் அழியாது நின்று பலராலும் ஏத்தப்படும் என்று அறியப்படுகின்றது.

இப்புலவர்கள் செந்நெறியிலேவாழ்ந்தவர்கள். இவர்களிற் பலர் வறுமையால் வாடிய வாழ்க்கை நடாத்துபவரேனும், தம் வயிற்றைவளர்ப்பதற்காக யாரையும் பாடித் தம் புலமையை விற்றோரல்லர். வீரமன்னரைப் புகழ்ந்தனர்; வீரமற்றோரை இகழ்ந்தனர். அறனழியச் செய்தோரை தகளாக மதித்துத் தூவென்று வெறுத்தனர். புலவர்கள், அரசர்களை மார்புறத் தழுவி மகிழ்ந்தனர்; பழியுடை மன்னரைப் பதரென ஒதுக்கினர்.

—(தொடரும்)

(திருவள்ளுவர் காட்டும்...! 3ம் பக்க தொடர்ச்சி.)

எனவே, கடவுள் என்பது எவ்வகையிலும் தனக்கு ஒப்புவமை காட்ட முடியாததாய், புலன்களுக்கு எட்டாததாய் நிற்கும் இயற்கை ஆற்றல் என்றும் ' தெய்வம் ' என்பது தனக்குஒப்புவமைகாட்டக்கூடியதாய் புலன்களால் உணரப்படும் தன்மையுடையதாய் உள்ள பொருள் என்றும் அறியக்கிடக்கின்றது.

திருவள்ளுவர் காட்டும் தெய்வமும் இத்தகையதே என்பதை, முற்கூறிய குறள்களைத் துருவி ஆராயின் உணரலாம். ★

(ஈரோட்டு லிங்கன்... 5ம் பக்கத் தொடர்ச்சி.)

தோன்றினான் வீர புருஷன் ஆப்ரகாம் லிங்கன். இதன் பயனாக உள்நாட்டுயுத்தங்களும் கலகங்களும் தோன்றின ஆப்ரகாமின் விடா முயற்சியாலும் தளராத உள்ளத்தாலும் அடக்கப்பட்டு, அடிமைகளின் சுதந்திர வாழ்வை நிர்ணயிக்கச் செய்து அவர்கள்பொருட்டே கொல்லப்பட்ட ஓர் இலட்சிய புருஷன்.

இவ்விதக் கொடுமைகள் உலகத்தின் எந்தப் பாகத்தில் நடந்திருப்பினும் ஒருசில நூற்றாண்டுகளில் அடக்கப்பட்டுவிடுகின்றது. ஆனால் இந்த பாழாய்ப்போன நாட்டிலேதான் 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் இங்கு நடக்கும் அக்கிரம ஆணவச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் காலம் வராமல் இருந்தது...ஏன்? இங்கு ஒரு லிங்கன் தோன்றாத காரணத்தால்...! இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க நம் திராவிடம் ஓர் ஒப்பற்ற லிங்கனைத் தந்திருக்கிறது. அமெரிக்காவிலே வெள்ளையர் குடியேறிய காலத்தில் அந்த நாட்டு பழங்குடி மக்கள் நாகரிகமில்லாதவர்களாயும், காட்டுமிராண்டிகளாகவும் வாழ்ந்தார்கள். வெள்ளையர்கள் நுழைவிற்குப்பின் தான் அந்தநாடு நாகரிகத்திலும் செல்வத்திலும் நலசிறந்து விளங்க ஆரம்பித்தது. அந்த நாட்டில்நடந்த அடிமைகளின் துயரையும் அழித்தொழிக்க வெள்ளையர்களிலேயே ஒருவர் தோன்றி அவ்வடிமைகளின் துயரத்தைத் துடைத்தார். ஆனால் நம் நாட்டிலோ ஆரியர்கள் நுழைவுக்கு முன்னால் நாகரிகத்திலே தலை சிறந்தவர்க[illegible] நாடுகளுக்குச் சென்று தம் வாணிபத்தை ந[illegible] செல்வம்சம்பாதித்தவர்களாயும், ஒன்றேகுலம் ஒரு[illegible] தேவன் என்ற ஓர் உயரிய பண்புடையவர்களாகவும், நயிலிலே நாகரிகத்தையும், இத்தாலியிலே வாணிபத்தின் வழியைக்காட்டியும் இமயத்திலே இருகொடி நாட்டி வீரமுடையவர்களாய் இருந்தவர்கள் திராவிடர் என்று சரித்திரம் பகர்கின்றது — வரலாற்றுச் சுவடிகளிலே காணக்கிடைக்கின்றது. இன்றைக்கும் பார்க்கும் அளவுக்கு மொகஞ்சதாரோ, ஹாரப்பா என்னும் இரு புதைந்த நகரங்களைத் தோண்டிப்பார்த்ததில் பலஅழகிய கட்டிடங்களும் விசாலமான தெருக்களும், உலோகங்களால் செய்யப்பட்ட ஆயுதங்களும், பாத்திரங்களும் அங்கு காணப்படுகின்றன. இவ்வளவு உயரிய பண்புகளையும், நாகரிகத்தையும் கொண்டமக்கள் இன்று பல துறையிலும் சீர்குலைந்த நிலையில் உள்ளனர்.

இவ்வாறு சீரழிந்த நிலை உழைக்கஒருசிலரும், உண்டு

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு	ஆறு மாதம்	தனிப்பிரதி
3 0 0	1 12	0 0 10

கொழுக்க ஒரு சிலரும் என்ற நிலைக்கு ஆகிவிட்டது. நமது மக்கள் எதற்கெடுத்தாலும் தலைவிதி, முன்ஜென்ம பலன் என்ற சொல்லைச்சொல்லி, பகுத்தறிவு கொண்டு எதையும் சிந்திக்க முடியாத நிலைமைக்கு ஆகிவிட்டனர்.

இவ்வித அறியாமையை போக்கலும், எதையும் பகுத்தறிவுக்கொண்டு பார்க்கச்செய்யலும், சுயமரியாதையோடு வாழுலும், அக்ரம அடாத ஆணவச் செயலை ஒழிக்கலும், நாமும் பிறநாட்டு மக்களைபோல் தலை நிமிர்ந்து நடக்கலும் வேண்டி ஓயாது உழைக்கும் "ஓர் ஒப்பற்ற லிங்கன் பெரியார்" அவர்களை பெற்றிருக்கிறோம் அவரது காலத்திற்குள்ளேயே இவ்விதகொடுமைகளை ஒழித்துக்கட்ட, கட்சி வேறுபாடின்றி ஒன்று சேர்ந்து உழைப்போம் தென்னாட்டு லெனின், அமெரிக்க லிங்கன் ஈரோட்டு ஏந்தல், வைக்கம் வீரர், சிறைக்கஞ்சா சிங்கம் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பலஇன்னல்கள் ஏற்படினும் ஏற்று, நமது வளர்மார் திராவிடத்தை பிரிக்க அவரது 73-வது ஆண்டு பிறந்த தினவிழாக் கொண்டாடும் இவ்வேளையில் "வாழ்க பெரியார்" என வாழ்த்துவோமாக.

திருமணங்கள்.

செயங்கொண்டம் வி. மு. லிங்கசெட்டியார் அவர்கள் இல்லில் எங்கள் திருமணம் 14--9—50ல் நடந்தபோது, பரிசுதள் வழங்கி ஆசிகூறிய ஆன்றோர்களுக்கு எங்கள் [illegible] கொள்கிறோம்.

மணமகள்: குஞ்சம்மாள்,
மணமகன்: முத்துசாமி.

பொய்யாமொழியின் வளர்ச்சி கருதி ரூ 2-0-0 வரப் பெற்றோம். (ஆ-ர்)

ஃ ஃ ஃ

15—9—50 வெள்ளிக்கிழமை காலை 9-மணி அளவில் **குஞ்சுநாதன், — ஜெயலெக்ஷ்மி** இவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் ஜெயங்கொண்டம் A. மெத்துசலா அவர்கள் தலைமையில் நிறைவேறியது. அவ்வமயம் திருமதி B, கருணாநிதி இசைநிகழ்ச்சிக்குப் பின், திரு. P. N. R. வைத்திலிங்கம் செட்டியார், M. ஜெயராமன், ரசூல், A. ராமசாமி, ஆசிரியர், S. நடேசன், பொய்யாமொழி ஆசிரியர் M. பாஸ்கரனார் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள்,

S. கனகசபை நன்றிகூறினார்.

பொய்யாமொழி வளர்ச்சிக்காக ரூ. 2—0—0 வரப் பெற்றோம். (ஆ-ர்)

ஃ ஃ ஃ

கும்பகோணம் மேனகா சுதேசி சிலேட் பாக்டரி கட்டிடத்தில் மானேஜர், திரு. பருவதாலு அவர்கள் தலைமையில் தோழர், இரத்தினம்,—தோழியர், சாவித்திரி திருமணம் நடைபெற்றது. அதுபோது திருச்சி தோழர் T.K சீனுவாசன், தோழர் M.K.S, பதி, ஃபாக்டரியின் உரிமையாளர் திரு. P. ஷண்முகம் முதலியோர்கள் திருந்திய திருமணம் என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

ந. சி.

கிராமாந்திரங்களில் உணவுப் பஞ்சம்!

கடந்தசிலவாரங்களாக இத்தாலுகா கிராமாந்திரங்களில் உணவு பங்கிடு சரிவர கிடைக்காமல் மக்கள் அவதியுறுகின்றனர். ஆகவே, அதிகாரிகள் உடனே தக்கது செய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

★

செய்திகள்.

திராவிட முன்னேற்றக் கழக
திராவிட நாட்டு பிரிவினை நாள்.

குடந்தை செப்-17

இன்று மாலை 6மணிக்கு உப்புக்காரத்தெரு ஜுப்ளி பார்க்கில் தோழர், K K நிலமேகம் அவர்கள் தலைமையில் தோழர்கள், V. சின்னதம்பி, சொக்கலிங்கம், N. V. நடராசன் ('திராவிடன்' ஆசிரியர்) திராவிட நாட்டுப் பிரிவினை நாள் என்னும்பொருள்பற்றி சொற்பெருக்காற்றினார்கள். சிறிது மழை பெய்தபோதிலும், அமைதியாக கூட்டம் 8½ மணிக்கு முடிவுற்றது. ந-நி.

ஃ ஃ ஃ

73வது பெரியார் பிறந்ததின விழா!

—:—

குடந்தையில் ஏழைமக்களுக்கு உணவு.

குடந்தை செப்-17

இவ்வூர் திராவிடர்கழக சார்பில் பெரியார் படத்தை மலர் மாலைகளாலும், இயக்க சின்னங்களாலும் அழகுபடுத்தி; வாசகசாலையை வர்ண தாள்களாலும். கொடி தோரணங்களாலும் அலங்கரித்து, பகல் 12-மணி முதல் 5-மணிவரை ஏழைமக்களுக்கு உணவுஅளிக்கப்பட்டது. மாலை 6-மணிக்கு சாக்கோட்டை திரு. வீரப்பா அவர்கள் தலைமை வகிக்க, திரு. K. கணபதி (ஆனந்தா சோப் உரிமையாளர்) தோழர்கள் S. சொக்கலிங்கம் A. M. ஜோசப், சோழபுரம் கன்னையன் முதலியோர் "பெரியார் பெருந்தொண்டு" என்பது குறித்து சொற்பெருக்காற்றினார்கள், செயலாளர் நன்றிகூற 8-மணிக்கு கூட்டம் முடிவுற்றது. (ந-நி)

ஃ ஃ ஃ

கௌரவர் வாலிபர் சங்கம்.

11—9—50ல் உ. தா. கௌரவர்பாளையத்தில் A.T.V. ஜெயராம் செட்டியார் தலைமையில் கௌரவர் வாலிபர் சங்கம் நிறுவப்பட்டது. ந, நி,

ஃ ஃ ஃ

கிரிகெட்.

ஜெயங்கொண்டத்தில் 17—9—50ல் ஆடிய கிரிகெட் ஆட்டம்.

A பக்கம்: 66 ரன்கள். G. ஹுசேன் 47. நாகராஜன் 12 ரன்னுக்கு 4 விக்கட் S. மணி 10-க்கு 3 விக்கட்.

B பக்கம்: 32 ரன்கள், N. V. நாதன் 21. கண்ணன் 7-க்கு 2 விக்கட். கோவிந்தசாமி 12-க்கு 2 விக்கட்

— நிருபர்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketchari Street, Jayankondacholapuram.